| R8192 |
|---|

| Sub. Code |
|---|
| 411201 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL – 2023**

**Second Semester**

**Tamil**

**பக்தி இலக்கியம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 1 = 10)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. சமயக்குரவர் என்று அழைக்கப்படுவர்?

(அ) திருஞானசம்பந்தர்

(ஆ) திருமூலர்

(இ) காரைக்கால் அம்மையார்

(ஈ) சேந்தனார்

2. திருப்பொற் சுண்ணம் என்பதைக் குறிக்கும் விளையாட்டு

(அ) ஊசல் (ஆ) உலக்கைப்பாட்டு

(இ) குரவை (ஈ) துணங்கை

3. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர்

(அ) புனிதவதியார் (ஆ) திலகவதியார்

(இ) இசைஞானியார் (ஈ) ஆண்டாள்

4. தஞ்சை இராசராசேச்சுரம் கோயிலைப் பற்றிக் கருவூர்த்தேவர் பாடியது?

(அ) திருப்பல்லாண்டு (ஆ) திருக்கோவையார்

(இ) திருவிசைப்பா (ஈ) திருவாசகம்

5. ‘வேதம் தமிழ் செய்தபிரான்’ என்று அழைக்கப்படுபவர்

(அ) பெரியாழ்வார் (ஆ) திருமங்கையாழ்வார்

(இ) ஆண்டாள் (ஈ) நம்மாழ்வார்

6. ஆண்டாளின் வளர்ப்புத் தந்தை

(அ) திருப்பாணாழ்வார் (ஆ) பெரியாழ்வார்

(இ) பொய்கையாழ்வார் (ஈ) தொண்டரடி பொடியாழ்வார்

7. ஆழ்வார்களால் பாடல் பெற்ற தலத்தைச் சுட்டும் முறை

(அ) மங்களாசாசனம் (ஆ) இறையிள

(இ) மெய்கீர்த்தி (ஈ) செப்பேடு

8. திருப்பள்ளியெழுச்சி என்பதன் பொருள்

(அ) துயில்தல் (ஆ) இறைவனை எழுப்புதல்

(இ) பாராட்டுதல் (ஈ) நீராட்டுதல்

9. வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்கத்தை நிறுவிய இடம்

(அ) சென்னை (ஆ) சிதம்பரம்

(இ) வடலூர் (ஈ) கடலூர்

10. ‘கண்ணி’ என்பதன் பொருள்

(அ) இரண்டடி பாடல் (ஆ) மூவடி

(இ) நான்கடி (ஈ) ஐந்தடி

## பகுதி ஆ — $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் (அல்லது அமைப்பில்) விடை தருக.

11. (அ) திருஞானசம்பந்தர் திருக்கழுமலப் பதிகத்தில் இறைவனைப் போற்றும் முறையை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மாணிக்கவாசகர் திருக்கோத்தும்பியல் உணர்த்தும் கருத்தினை ஆராய்க.

12. (அ) காரைக்கால் அம்மையார் இறைவனிடம் கொண்ட பக்தியை விளக்குக.

(அல்லது)

(ஆ) கண்டராதித்தர் பாடிய கோயில் பதிகத்தின் சிறப்பினை விளக்குக.

13. (அ) பெரியாழ்வார் கண்ணனை குழந்தையாகப் பாவித்து பாடிய பாசுரங்களின் சிறப்பை ஆராய்க.

(அல்லது)

(ஆ) குலசேகராழ்வார் வித்துவக்கோட்டு அம்மானை விளித்து வேண்டும் வரங்களை ஆராய்க.

14. (அ) தொண்டரடிப் பெரியாழ்வார் பாசுரங்களில் புலப்படும் விடியற்கால வருணனையை விளக்குக.

(அல்லது)

(ஆ) திருப்பாணாழ்வார் இறைவன் மேல் கொண்ட பக்தி நெறியைப் புலப்படுத்துக.

15. (அ) பிள்ளைச் சிறு விண்ணப்பத்தில் வள்ளலார் வேண்டும் வரங்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பராபரக் கண்ணியில் புலப்படும் இறைவனின் சிறப்புக்களை விவரி.

**பகுதி இ** $(5 \times 8 = 40)$

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க

16. தேவாரப் பாடல்களில் புலப்படும் இறைவனின் சிறப்புக்களையும் தலத்தின் பெருமையையும் ஆராய்க.

17. திருமூலர் 'திருவடிப்போற்றில்' புலப்படுத்தும் பக்தி நெறியை விவரி.

18. ஆண்டாள் பாடிய திருமாலிருஞ்சோலையின் இயற்கைச் சிறப்பினை விவரி.

19. திருமங்கையாழ்வார் திருக்கோட்டியூர் இறைவன் மீது கொண்டிருந்த பக்தித் திறத்தைப் புலப்படுத்துக.

20. வள்ளலாரின் இறைநெறிக் கோட்பாட்டை ஆராய்க.

21. தலங்கள் தோறும் சென்று பக்தி இலக்கியத்தை வளர்த்த அருளாளர்களின் தொண்டினை ஆராய்க.

22. பக்தி இலக்கியத்தில் காணப்படும் நாட்டுப்புற இலக்கிய வடிவங்களை ஆராய்க.

23. சிற்றிலக்கிய வளர்ச்சிக்குப் பக்தி இலக்கியங்களின் பங்களிப்பினை விளக்குக.

———————

| R8193 |
|---|

| Sub. Code |
|---|
| 411202 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL – 2023**

**Second Semester**

தமிழ்

தொல்காப்பியம் — சொல்லதிகாரம்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

பகுதி அ    $(10 \times 1 = 10)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. அடை, சினை, முதல் எனும் மூன்றும் மயங்காமல் வருவது

   (அ) இயல்பு வழக்கு    (ஆ) தகுதி வழக்கு

   (இ) பலர்பால் ஈறு    (ஈ) வண்ணச் சினைச் சொல்

2. வேற்றுமை தாமே ———— என மொழிப

   (அ) இரண்டென    (ஆ) ஆறென

   (இ) நான்கென    (ஈ) ஏழென

3. கன்றலுஞ் செலவும் ————

   (அ) நான்குமார் வினையே

   (ஆ) ஏழுமார் வினையே

   (இ) ஒன்றுமார் வினையே

   (ஈ) ஆறுமார் வினையே

4. உயர்திணைப் பெயருள் விளி ஏற்கும் உயிரீறுகள்

   (அ) ன, ர, ல, ள    (ஆ) ஏ, ஔ

   (இ) இ, உ, ஐ, ஓ    (ஈ) த, ந, ங, எ

5. தானென் கிளவி ———————— உரித்தே

(அ) பன்மை (ஆ) ஒருமை

(இ) படர்க்கை (ஈ) தன்னிலை

6. காலந்தாமே ———————— மொழிப

(அ) இரண்டென (ஆ) நான்கென

(இ) மூன்றென (ஈ) ஒன்றென

7. கழிவு, ஆக்கம், ஒழியிசை குறித்து நிற்கும் இடைச்சொல்

(அ) உம் (ஆ) தில்

(இ) கொன் (ஈ) மன்

8. மாதர் என்னும் உரிச் சொல்லின் பொருள்

(அ) மென்மை (ஆ) பொலிவு

(இ) காதல் (ஈ) தனிமை

9. சுரையாழ அம்மி மிதப்ப என்னும் சான்று

(அ) நிரனிறைப் பொருள்கோள்

(ஆ) அடிமறி மாற்றுப் பொருள்கோள்

(இ) சுண்ணப் பொருள்கோள்

(ஈ) மொழி மாற்றுப் பொருள் கோள்

10. பசப்பு என்ற சொல் உணர்த்தும் பொருள்

(அ) நிறம் (ஆ) புணர்ச்சி

(இ) சிறத்தல் (ஈ) உவகை

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

11. (அ) கிளவியாக்கம் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள்-என்பன யாவை?

12. (அ) மூன்றாம் வேற்றுமை உருபும் பொருளும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) விளி ஏற்கும் புள்ளி ஈறுகள் பற்றி விளக்குக.

13. (அ) உயர்திணைப் பெயர்கள் யாவை?-விவரிக்க.

(அல்லது)

(ஆ) இருதினைக்கும் உரிய வினைச் சொற்கள் குறித்து எழுதுக.

14. (அ) இடைச்சொல்லின் இயல்பை விவரிக்க.

(அல்லது)

(ஆ) குறிப்புப் பொருள் உணர்த்தும் உரிச்சொற்களை விளக்குக.

15. (அ) செய்யுள் ஈட்டச் சொல்லே-விளக்குக.

(அல்லது)

(ஆ) வினைமுற்றின் வகைகளை விளக்குக.

**பகுதி இ** $(5 \times 8 = 40)$

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

16. கிளவியாக்கத்தில் இடம் பெறும் திணை, பால், இடம் போன்றவற்றின் நிலைகளைப் புலப்படுத்துக.

17. வேற்றுமை உருபுகளை விளக்கி எழுதுக.

18. சொற்களின் பாகுபாட்டினை விவரிக்க.

19. உரிச் சொற்களின் வகைகளை விளக்கிக் கட்டுரை வரைக.

20. எச்சச் சொற்களின் வகைகளை விவரிக்க.

21. பொருள் கோள் வகைகளை விளக்கிச் சான்று தருக.

22. விளிமரபு தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

23. பெயர்கள் விளியேற்கும் நிலையைச் சான்றுடன் விளக்குக.

————————

| R8194 |
|---|

| Sub. Code |
|---|
| 411203 |

## M.A. DEGREE EXAMINATION, APRIL – 2023

### Second Semester

### தமிழ்

### பொது மொழியியல்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 1 = 10)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. ஒலித் தசைகளின் வேறு பெயர்

   (அ) ஒலிப்புடை ஒலி (ஆ) குரல்நாண்

   (இ) உள்நாக்கு (ஈ) அண்ணம்

2. மொழிக்கு உறுப்பாகும் எழுத்துகளின் மிகச்சிறிய ஒலிக்கூறு

   (அ) மாற்றொலி (ஆ) ஒலியன்

   (இ) உருபன் (ஈ) உருபு

3. தொல்காப்பியர் எழுத்து என்று கூறுவதை மொழியியலார் எவ்வாறு குறிப்பிடுவர்?

   (அ) மாற்றொலி (ஆ) ஒலியன்

   (இ) மூக்கொலி (ஈ) மருங்கொலி

4. தமிழ் சொற்களில் ‘க்’ எனும் ஒலியனுக்காக மாற்றொலிகள்

   (அ) k, g, h (ஆ) A, C, D

   (இ) N, O, P (ஈ) H, I, M

5. ஒவ்வொரு ஒலியனும் பல மாற்றொலிகளைக் கொண்டிருப்பது

(அ) அடைப்பொலி (ஆ) ஒலியனியல்

(இ) ஒலிக்கூறு (ஈ) ஒலிக்குழு

6. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேலான ஒலியன்களால் ஆனது

(அ) தொடர்கள் (ஆ) சொற்கள்

(இ) பத்திகள் (ஈ) பக்கங்கள்

7. சொற்களின் இரண்டு வகைகள்

(அ) ஒன்றி நிற்கும் நிலை, ஒன்றி நிற்கா நிலை

(ஆ) விளங்கி நிற்கும் நிலை, விளங்கி நிற்கா நிலை

(இ) தனிநிலை, தனித்து நிற்கா நிலை

(ஈ) தொடர்நிலை, தொடரியல் நிலை

8. அமெரிக்க விளக்க மொழியியலின் தந்தை

(அ) ஹாரிஸ் (ஆ) ரூஸோ

(இ) ஃப்ளூம் பீல்டு (ஈ) போயஸ்

9. இதழ் குவிவதால் பிறக்கும் உயிர்கள்

(அ) அ, ஆ (ஆ) எ, ஏ

(இ) ஐ, ஃ (ஈ) உ, ஊ

10. P, B, T, D, C, J, K, G என்பன

(அ) வருடொலிகள் (ஆ) அடைப்பொலிகள்

(இ) உரசொலிகள் (ஈ) ஆடொலிகள்

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) மெய்யொலிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒலியுறுப்புகள் பற்றி விளக்குக.

12. (அ) வேற்றுநிலைக் கொள்கை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒலி ஒற்றுமைக் கொள்கையை விளக்குக.

13. (அ) உருபொலியனியல் மாற்றம் என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) மாற்றுருபு என்றால் என்ன?

14. (அ) அண்மையுறுப்புகள் யாவை? – விளக்குக.

(அல்லது)

(ஆ) மாற்றிலக்கண விதிகளை விளக்குக.

15. (அ) பொருளின் வகைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) பொருள் மயக்கங்கள் பற்றி எழுதுக.

**பகுதி இ** $(5 \times 8 = 40)$

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

16. மொழியியலின் வரலாறு மற்றும் பிரிவுகளை விவரிக்க.

17. கென்னத் பைக்கின் அடிப்படை ஒலியனியல் கொள்கைகளை விளக்குக.

18. உருபொலியனியல் மாற்றம், உருபொலியனியல் விதிகள் குறித்து விரிவாக எழுதுக.

19. அண்மையுறுப்புக் கோட்பாடு, தொடரமைப்புக் கோட்பாடு-விளக்குக.

20. பொருள் விளக்கக் கொள்கைகளை விரிவாக எழுதுக.

21. ஒலியியல், அதன் வகைகளை விளக்கிக் கட்டுரை வரைக.

22. ஒலி ஒற்றுமைக் கொள்கை, உறழ்ச்சிக் கொள்கை-விவரிக்க.

23. ஓரினமாதல், வேறினமாதல் - விளக்கி எழுதுக.

———————

| R8195 |
|---|

| Sub. Code |
|---|
| 411204 |

## M.A. DEGREE EXAMINATION, APRIL – 2023

### Second Semester

### தமிழ்

### இலக்கியத் திறனாய்வியல்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 1 = 10)

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இலக்கியக் கலை என்ற நூலின் ஆசிரியர்

   (அ) தி.சு. நடராசன் (ஆ) தொ.மு.சி. ரகுநாதன்

   (இ) சுப்புரெட்டியார் (ஈ) அ.ச. ஞானசம்பந்தன்

2. ‘இரசிகமணி’ எனப்போற்றப் பெற்றவர்

   (அ) டி.கே.சி (ஆ) தொ.மு.சி

   (இ) தி.க.சி (ஈ) ம.பொ.சி

3. உலக தொன்மை மொழிகள் எனப்படுவன

   (அ) சீனமும் இரஷ்யனும்

   (ஆ) தெலுங்கும் கன்னடமும்

   (இ) கிரேக்கமும் இலத்தீனும்

   (ஈ) தமிழும் ஆங்கிலமும்

4. சங்கச் செவ்வியல் எனும் நூலினை எழுதியவர்

   (அ) முத்துசண்முகன் (ஆ) அன்னக்காமு

   (இ) திருமலை (ஈ) சாரதாம்பாள்

5. தமிழில் சமூகவியல் ஆய்வுமுறை முன்னோடி

(அ) கைலாசபதி (ஆ) பாண்டுரங்கன்

(இ) தமிழவன் (ஈ) திருமேனி

6. கம்பனும் மில்டனும் எனும் நூல்

(அ) மொழிபெயர்ப்பு (ஆ) கவிதை

(இ) ஒப்பிலக்கியம் (ஈ) காவியம்

7. பெண்ணிய எழுத்தாளர்

(அ) குட்டி ரேவதி (ஆ) நா. காமராசன்

(இ) வைரமுத்து (ஈ) வாலி

8. மண்ணும் மனித உறவுகளும் எனும் நூலை எழுதியவர்

(அ) ஞானி (ஆ) பிரளயன்

(இ) கோ. கேசவன் (ஈ) அ. மார்க்ஸ்

9. பின் நவீனத்துவ எழுத்தாளர்

(அ) அரங்கநாதன் (ஆ) எம்.ஜி. சுரேஷ்

(இ) பைரவி (ஈ) சூர்யகாந்தன்

10. தமிழவன்

(அ) நவீனத்துவம் (ஆ) அழகியல்

(இ) அமைப்பியல் (ஈ) செவ்வியல்

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்கம் அல்லது 250 சொற்களுக்கு மிகாமல் விடையளி.

11. (அ) திறனாய்வின் பண்பையும் பயனையும் எழுதுக.

(அல்லது)

(ஆ) அழகியல் திறனாய்வு – குறிப்பு வரைக.

12. (அ) தமிழில் பெண்ணியப் படைப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழில் தலித்தியப் படைப்புகள் குறித்து எழுதுக.

13. (அ) மானிடவியல் திறனாய்வின் பண்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உளவியல் திறனாய்வு குறித்து எழுதுக.

14. (அ) செவ்வியல் பண்புகளைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) உருவவியல் என்பதை விளக்குக.

15. (அ) பின் நவீனத்துவம் என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) அமைப்பியல் கூறுகளைச் சுட்டுக.

**பகுதி இ** $(5 \times 8 = 40)$

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மூன்று பக்கங்களுக்கு மிகாமல் விடையளி.

16. திறனாய்வின் வகைகளை விளக்குக.

17. சங்கச் செவ்வியல் கூறுகளை விவரி.

18. செவ்வியல் கோட்பாடுகள் பற்றி விளக்குக.

19. தமிழ் ஒப்பீட்டுமுறைத் திறனாய்வுப் போக்குகளை விவரி.

20. சமூகவியல் ஆய்வின் நிறை குறைகளை ஆய்க.

21. தலித் திறனாய்வுப் போக்குகளை விவரி.

22. மார்க்சியத் திறனாய்வின் அடிப்படைகளை விவரி.

23. தமிழில் அமைப்பியல் திறனாய்வு பற்றி விளக்குக.

---

**R8196**

| Sub. Code |
|---|
| **411205** |

**M.A. DEGREE EXAMINATION, APRIL – 2023**

**Second Semester**

**தமிழ்**

**துறைச்சார் சிறப்பு விருப்பப்பாடம் – II : தமிழகக் கோயிற்கலை**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 1 = 10)

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. பழங்காலக் கட்டடக் கலைகளுள் ஒன்று

   (அ) கோவில் கலை (ஆ) ஓவியக் கலை

   (இ) இசை கலை (ஈ) ஆடற் கலை

2. பாறைக் கோயில்கள் தொடங்கப்பட்ட நூற்றாண்டு

   (அ) கி.மு. 7 நூற்றாண்டு (ஆ) கி.பி. 9 நூற்றாண்டு

   (இ) கி.பி. 6 நூற்றாண்டு (ஈ) கி.பி. 7 நூற்றாண்டு

3. சிலப்பதிகாரம் காலத்தில் கட்டப்பட்டக் கோயில்

   (அ) பத்தினிக் கோயில் (ஆ) முருகன் கோயில்

   (இ) சிவன் கோயில் (ஈ) பிரம்மன் கோயில்

4. முருக வழிபாட்டைப் பற்றி கூறும் நூல்

   (அ) பரிபாடல் (ஆ) கலித்தொகை

   (இ) திருக்குறள் (ஈ) அகநானூறு

5. விஜய நகர ஆட்சிக் காலத்தில் உருவானவை

(அ) மண்டபங்கள் (ஆ) மதில்கள்

(இ) கோபுரங்கள் (ஈ) கட்டிடங்கள்

6. தொல்காப்பியம் கூறும் கலை

(அ) சிற்பக் கலை (ஆ) கோபுரக்கலை

(இ) கட்டடக் கலை (ஈ) ஓவியக் கலை

7. "சயந்தம்" என்பது

(அ) நாடகக் கலை (ஆ) சிற்பக் கலை

(இ) ஓவியக் கலை (ஈ) சமையற் கலை

8. தாராசுரத்து சிவன் கோயிலைக் கட்டியது

(அ) நாயக்கர்கள் (ஆ) பாண்டியர்கள்

(இ) சேரர்கள் (ஈ) சோழர்கள்

9. சிதம்பரம் கோயிலிலுள்ள நான்கு கோபுர உயரம்

(அ) 135 அடி (ஆ) 132 அடி

(இ) 139 அடி (ஈ) 145 அடி

10. கங்கை கொண்ட சோழபுரம் கோயிலைக் கட்டியவர்

(அ) கரிகால சோழன்

(ஆ) இராஜ ராஜ சோழன்

(இ) இரண்டாம் ராஜேந்திரன்

(ஈ) முதலாம் ராஜேந்திரன்

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கோயில் என்பதை வரையறை செய்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியம் சுட்டும் தெய்வ வழிபாட்டினை விளக்குக.

12. (அ) கோயில் அமைப்பதற்கான நியதிகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) குறிப்பு வரைக: (i) விமானங்கள், (ii) மண்டபங்கள்

13. (அ) திருவுருவ அமைதிகள் பற்றி கூறுக.

(அல்லது)

(ஆ) குறிப்பு வரைக: (i) கண் திறப்பு, (ii) எண் மருந்து சார்த்துதல்

14. (அ) கோயிலும் ஓவியக்கலையும் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) கோயிலும் சமையற்கலையும் பற்றி விளக்குக.

15. (அ) வழிபாட்டு வகைமைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மேல்நிலையாக்கம் என்பது பற்றி உம் கருத்தை விளக்குக.

## பகுதி இ (5 × 8 = 40)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் மூன்று பக்க அளவில் விடை தருக.

16. சங்க இலக்கியங்கள் சுட்டும் கோயில் பற்றியச் செய்திகளைத் தொகுத்து வழங்குக.

17. சோழர் கால கோயில்களின் சிறப்புத் தன்மைகளை விவரி.

18. இருபதாம் நூற்றாண்டில் கோயில் அமைப்பும் வளர்ச்சியும் பற்றி விவரி.

19. திருக்கோயில்களும் சிற்பக் கலை மேம்பாடும் குறித்து ஒரு கட்டுரை வரைக.

20. பல்வேறு வழிபாட்டு முறைகள், விழாக்கள் பற்றி விவரி.

21. ஊரகத் தெய்வத்திற்கும் பெருந் தெய்வத்திற்குமுரிய ஒற்றுமை, வேற்றுமைகளை விவரி.

22. கோயில்களுடன் தொடர்புடைய அழகுக் கலைகள் பற்றி விவரி.

23. கோயில்கள் ஒரு சமுதாய நிறுவனம் என்பதை ஆய்க.

———————